# 6. தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியம்

தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியம் அரசாணை (நிலை) எண்.184, வேளாண்மை (எவி) துறை நாள் 27.08.2010 மூலம் அனுமதிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த வாரியத்தின் மூலம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த அரசு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. தென்னை பயிரிடும் விவசாயிகள் களப்பணியாளர்கள் மூலம் இவ்வாரியத்தில் தங்களை உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளலாம். அவர்களுக்கு பாஸ் புத்தகம் வழங்கப்பட்டு வருகிறது.

தென்னை விவசாயிகள் பயன் பெறும் வகையில் தென்னை சாகுபடி நுட்பங்கள் அடங்கிய தென்னை செய்தி மடல் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகிறது. தென்னை வளர்ச்சிக்காக பரப்பு விரிவாக்கம், தென்னை நுண்ணூட்ட உர விநியோகம், சூரிய சக்தி மூலம் இயங்கும் சிறு உலர் கலன்கள் அமைத்தல் போன்ற திட்டங்கள் இவ்வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாரியத்தை அரசு மீண்டும் அமைத்து அதன் நடவடிக்கைகளை தொடர உள்ளது.